1979 நவம்பர் 8]

திரு. ஆர். மணிமாறன்: இதுவரையில் என்னென்ன முயற்சிகள எடுக்கப்பட்டுள்ளன? இப்படிப்பட்ட பிரிக்கிற நிலை எப்போது இறுதிக் கட்டத்தை எட்டிப்பிடிக்கும் என்று அறிய விரும்புகிறேன்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): 1973-ம் ஆண்டு நிர்வாகச் சீர்திருத்தக் குழுவால் பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவு, பாசனப் பிரிவு என்று இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும் என்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால் அது அரசாணை ஆக்கப்படாமலிருந்தது. 10—11—1978ல் அரசாங்கம் தலைமைச் செயலாளர் தலைமையில் செயலர் குழு ஒன்றை நிறுவியது. அந்த செயலர் குழுவிடம் அரசு ஒரு அறிக்கையை கேட்டது. செயலர் குழுவும் அரசுக்கு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. தற்போது அமைச்சரவையின் முடிவு எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: மாநிலப் பொதுப் பணித் துறையை இரண்டாகப் பிரிப்பதானால் நிர்வாகச் செலவு அதிகமாகும் என்பதை அரசு உணருமா? அப்படிப் பிரிப்பதன் உள் நோக்கம் என்னவென்று அறிய விரும்புகிறேன்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): ஆக்கப் பணிகளைத் துரிதப்படுத்தவும், தேவையற்றச் செலவுகளைத் தடுக்கவும் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்தவர்களாக விளங்கும் அதிகாரிகளின் கீழ் அந்தந்தப் பிரிவு ஆக்கப் பணிகளுக்காக பணிக்கப்படுகிறபோது மேலும் திறன்பட பணிகள் நடக்கும் என்ற நல்லெண்ணத்தில்தான் பிரிக்கப்பட உத்தேசித்துள்ளது.

திரு. க. மருதாசலம்: மாநிலப் பொதுப் பணித் துறையை இரண்டாகப் பிரிப்பதுபோல் மாவட்டத்தில் இருக்கிற பொதுப் பணித் துறைகளையும் இரண்டாகப் பிரித்தால் அங்கு வேலைகள் செவ்வனே நடைபெறுவதற்கு உதவியாகயிருக்குமே. அதையும் பிரிக்க உத்தேசமுண்டா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பிரிப்பது மாவட்டங்களின் நலனையும் கருதித்தான்.

வேலை நிதித் திட்டத்தின்கீழ் பணிபுரிந்து வருவோர்.

* வினா எண் 82—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பொதுப் பணித் துறையில் ''Work charged'' என்ற பெயரில் உள்ள அரசாங்க ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை தற்பொழுது என்ன?

(ஆ) இவர்களது வேலை நிலைமைகளை அபிவிருத்தி செய்ய அரசு மேற்கொண்ட முயற்சிகள் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ;

(அ) மொத்தம் 10,564 ஊழியர்கள்.

(ஆ) 10,449 ஊழியர்கள் மாநில சேவையாக்கப்பட்டவர்கள். மாநில சேவையாக்கப்படாத மீத 115 ஊழியர்களின் பணியை அரசு ஊழியர் பணிக்கு கொணர்வது பற்றிய செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாநில சேவையாக்கப்பட்டவர்கள் என்றால் நிரந்தரமாக்கப்பட்டவர்கள் என்றால், அவர்கள் தற்சமயம் வாங்குகிற சம்பளம் எவ்வளவு? அவர்கள் வேலைக்குச் சேரும்போது எந்தளவில் வாங்கிக் கொண்டிருந்தார்கள்? மீதுள்ள 115 பேர்கள் எப்போது நிரந்தரமாக்கப் படயிருக்கிறார்கள்? காலதாமதத்திற்கான காரணம் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : சேவையாக்கப்பட்டவர்கள், 1977-ம் ஆண்டு 9,771 பேரும், 1978-ம் ஆண்டு 651 பேரும், 1979-ம் ஆண்டு 27 பேரும் ஆக 10,449 பேர்கள் அரசு பணியாளர்களாக்கப்பட்டனர். மீதியுள்ள 115 பணியாளர்கள் அரசு பணியாளர்களாக்க 115 இடங்கள் ஏற்படுத்துவது பற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. 115 சேவையாக்கப்படாத ஊழியர்களை அரசு பணியாளர்களாக்க 115 இடங்கள் ஏற்படுத்துவதிலும், சில பணியாளர்கள் ஐந்து ஆண்டுக்காலம் பணி முடிவடையாததாலும், மொத்தமாக அத்தனை பேரையும் அரசுப் பணியாளர்களாக்கிட வேண்டும் என்றும் வொர்க் சார்ஜ்ட் என்ற பெயரில் ஊழியர்கள் பொதுப் பணித் துறையில் இருக்கக்கூடாது என்று துறை விரும்புவதாலும் காலதாமதமில்லாமல் அவர்களை அரசுப் பணியாளர்களாக்க பணிகள் நடக்கின்றன.

[முற்பகல் 9-10]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த வொர்க் சார்ஜ்ட் ஊழியர்கள் லிஸ்ட் தயார் செய்கிறபோது ஐந்து ஆண்டுகள், பத்து ஆண்டுகள் பணி செய்தவர்கள் எல்லாம் பலர் விடுபட்டுப் போயிருக்கிறார்கள் என்று அலுவலர்களே குறிப்புகள் எழுதியிருக்கிறார்கள். ஆகவே இவ்விதம் விடுபட்டுப் போனவர்களை இந்த லிஸ்டில் ஏற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : ஆதாரத்தோடு இதை குறிப்பிட்டு காட்டுவார்களேயானால் அவர்களும் சேர்க்கப்படுவார்கள்.

1979 நவம்பர் 3]

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்கின்றவர்கள் எத்தனை பேர்கள் இன்னும் நிரந்தரமாக்கப் படாமல் இருக்கிறார்கள்? இப்படிப்பட்டவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று முன்பு சொல்லப்பட்டது. ஆகவே இவர்களை எல்லாம் அரசு நிரந்தரமாக்கப்படுவதற்காக ஏற்பாடுகளை துரிதமாக செய்யுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, 115 பேர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களையும் நிரந்தரமாக்குவதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் முன்னாலேயே சொல்லி விட்டேன்.

திரு. என். பழனிவேல்: பொதுப் பணித் துறையில் பணி செய்கின்றவர்கள் யாராவது இறந்துவிட்டால் அவர்களுக்கு ஆண் வாரிசுகள் இல்லாமல் போகிறது பலருக்கு. அப்படிப்பட்டவர்களின் மனைவிகளுக்கு—அந்த விதவைகளுக்கு பொதுப் பணித் துறையில் வேலை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா;

திரு. எம். வின்சென்ட், (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை.

மில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் விக்கிரமசிங்கபுரம்

*வினா எண். 83— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள மில் தொழிலாளர்கள் கூட்டுறவுப் பண்டக சாலைக்கு உடனடியாக தேர்தல் நடத்துமாறு அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள ஹார்வி மில்ஸ் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைக்கு உடனடியாக தேர்தல் நடத்துமாறு மேற்படி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஒரு கோரிக்கை கொடுத்திருந்தார்.